<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No. 733/2023</u>
<u>வழக்கு சாட்சி PW-1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முகைதீன் அப்துல் | தாலுகா | : | அம்பாசமுத்திரம் |
| தந்தை பெயர் | : | மைதீன் பிச்சை | தொழில் | : | உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| கிராமம் | : | கல்லிடைக்குறிச்சி | வயது | : | 62 |
| | : | | | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 10th, 2025.

**(2ம் எதிரி ஆஜர். 1மற்றும் 3 எதிரிகள் ஆஜரில்லை. 1மற்றும் 3 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணியாற்றி, பணி ஓய்வு பெற்று தற்சமயம் கல்லிடைக்குறிச்சியில் குடியிருந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் ஆலங்குளம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது, 25.05.2018ம் தேதி, காலை 11.00 மணிக்கு தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை மூட வேண்டி நடந்த போராட்டம் காரணமாக நானும், என்னுடன் சிறப்பு காவல் ஆய்வாளர் திரு.மாரியப்பன், முதல்நிலை காவலர் ஜெயபாலன், காவலர் ஆனந்தராஜ், காவலர் முருகேசன் ஆகியோர் பாதுகாப்பு செய்தும், வாகனத்தணிக்கை செய்தும் அலுவல் செய்து வந்தபோது, ஆலங்குளம் காமராஜர் சிலை அருகே நின்றுகொண்டிருந்த 3 நபர்களை நான் அழைத்த போது, திடீரென்று அவர்கள் மறைத்து வைத்திருந்த அரிவாளை வைத்துக்கொண்டு

போலீஸ்கார தேவடியா பயல்களா? என்று கெட்ட வார்த்தைகளால் பேசி என்னை வெட்ட ஓடிவந்தார்கள். நான் குனிந்து ஓடி வந்து விட்டேன். அவர்களோடு வந்த இன்னொருவர் என் அருகில் நின்று கொண்டிருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் மாரியப்பன் அவர்களை அசிங்கமாக பேசிக்கொண்டு அரிவாளால் வெட்ட வந்தார். அவரும் தப்பி ஓடிவிட்டார். உடனே, அருகில் இருந்த காவலர்கள், ஆட்டோ டிரைவர்கள் மற்றும் அங்கிருந்த மக்கள் அங்கு வரவும், அவர்கள் இருவரும் அரிவாளை தலைக்கு மேலாக சுழற்றிக்கொண்டும், அவர்களுடன் இருந்த 3 வது நபரும் எங்ககிட்ட யாராவது வந்தால் வெட்டி கொன்று விடுவோம் என்றும், 3 பேர்களும் அரிவாள்களை சுழற்றிய வண்ணம் எங்களையும், அருகில் உள்ள பொதுமக்களையும் வெட்டிக்கொன்று விடுவேன் என்று மிரட்டி விட்டு மேற்கு திசையை நோக்கி ஓடி விட்டார்கள். நான் பின்னர் மற்றவர்களை பாதுகாப்பு அலுவலில் விட்டு விட்டு, நான் மட்டும் காவல்நிலையம் சென்று சுமார் 12.00 மணியளவில் அங்கிருந்த உதவி ஆய்வாளர் சுதாகர் அவர்களிடம் மேற்படி 3 நபர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்தேன். அந்த புகார் மனு அ.சா.ஆ.1. ஆகும். பின்னர், விசாரணையில் என்னை வெட்ட வந்தவர் தருமர் மகன் முருகன், வயது 25, சுத்தமல்லியை சேர்ந்தவர் என்றும், சிறப்பு உதவி ஆய்வாளர் மாரியப்பனை வெட்ட வந்தவர் பாளையங்கோட்டை எம்.கே.பி.நகரை சேர்ந்த கந்தசாமி என்பவரின் மகன் மூர்த்தி, வயது 26 என்றும், இன்னொரு நபர் பாவூர்சத்திரத்தை சேர்ந்த சங்கரநாராயணன் மகன் ஸ்ரீதரன் என்றும் தெரிந்து கொண்டேன்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u> – இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.07.11 12:43:03 +0530

<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No. 733/2023</u>
<u>வழக்கு சாட்சி PW-2</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயபாலகிருஷ்ணன் | தாலுகா | : | வீ.கே.புதூர் |
| தந்தை பெயர் | : | அருணாச்சலம் | தொழில் | : | தலைமைக்காவலர் |
| கிராமம் | : | கீழச்சுரண்டை | வயது | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 10th, 2025.

**(2ம் எதிரி ஆஜர். 1மற்றும் 3 எதிரிகள் ஆஜரில்லை. 1மற்றும் 3 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது திருநெல்வேலி சரகம் திட்டமிட்ட குற்ற நுண்ணறிவு பிரிவில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு ஆலங்குளம் காவல்நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணியில் இருந்தபோது, 25.05.2018ம் தேதி, காலை 11.00 மணிக்கு உயர் அதிகாரிகளின் உத்தரவுப்படி தூத்துக்குடி மாவட்டம் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக நடைபெற்ற போராட்டத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்பட்டதால், அதன் விளைவாக ஆலங்குளம் காவல்நிலையத்திற்குட்பட்ட பகுதியில் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படாமல் இருக்க உதவி ஆய்வாளர் திரு.முகைதீன் அப்துல் காதர், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.மாரியப்பன், 2ம்நிலை காவலர் முருகேசன், 2ம்நிலை காவலர் ஆனந்தராஜ் மற்றும் நானும் சேர்ந்து ஆலங்குளம் புதிய பேருந்து நிலையம்

அருகிலுள்ள காமராஜர் சிலை அருகே ரோந்து செய்து கொண்டிருந்தோம். சந்தேகத்திற்கிடமாக நின்றுகொண்டிருந்த பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட எதிரிகளான 1.முருகன், 2.மூர்த்தி, 3.ஸ்ரீதரன் ஆகியோர்களை விசாரித்தபோது, "இந்த போலீஸ்காரர்களுக்கு இதே வேலையா போச்சு, தேவடியா பயலுகளா, இவனுங்களை கொன்னால் தான் நான் நிம்மதியாக இருக்க முடியும்" என்று கூறி, எதிரி முருகன் என்பவர் உதவி ஆய்வாளர் திரு.முகைதீன் அப்துல் காதர் அவர்களை அரிவாளால் வெட்ட முற்பட்ட போது, அவர் சுதாகரித்து கொண்டு விலகியதால் அந்த வெட்டு அவர் மேல் படவில்லை. அவர் மேல் பட்டிருந்தால் அவரின் தலை துண்டாகியிருக்கும். மேற்படி, எதிரி மூர்த்தி என்பவர் சட்டைக்கு பின்னால் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.மாரியப்பன் என்பவரை வெட்டும் போது, அவர் சற்று விலகியதால் அந்த வெட்டு அவர் மேல் படவில்லை. அந்த வெட்டு அவர் மேல் பட்டிருந்தால் தலை துண்டாகியிருக்கும். பின்பு, காவலரும், பொதுமக்களும் மேற்படி 3 எதிரிகளை பிடிக்க முற்பட்ட போது அவர்கள் அரிவாளை தலைக்கு மேல் சுழற்றிக்கொண்டு மிரட்டியதால், அங்கிருந்த கடைக்காரர்கள் கடையை அடைத்து விட்டும், ஆட்டோ ஓட்டுநர்கள் ஆட்டோவை ஓட்டி சென்றார்கள். சிறிது நேரம் போக்குவரத்து ஸ்தம்பித்தது. அரசு பணியை செய்ய விடாமல் தடுத்ததால் எதிரிகளை கைது செய்து காவல்நிலையம் கொண்டு வர உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.07.11 12:43:11 +0530